1987 நவம்பர் 18]

(ஊ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையிலிருந்து பேருந்துகள் விடப்படாதது.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறையிலிருந்து ஒரு பேருந்துகூட விடப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

குழித்துறை நகராட்சியில் தொடுவெட்டி ஒரு முக்கிய இடமாக இருப்பதால் இந்நகராட்சியிலிருந்து செல்லும் எல்லாப் பேருந்துகளும் தொடுவெட்டியிலிருந்து புறப்படுகின்றன. இவ்வாறு இங்கிருந்து புறப்படக்கூடிய மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு திசைகளில் செல்லும் எல்லா பஸ்களும் குழித்துறை வழியாகச் செல்கின்றன. தொடுபட்டி மற்றும் கலியக்காவிளை பேருந்து நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியாக உள்ள குழித்துறை இடவசதியற்றதாக உள்ளதால் இங்கிருந்து பேருந்துகள் புறப்பட இயலாது. எனினும் அப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2 புறநகர் பேருந்துகளும், 3 நகர பேருந்துகளும் குழித்துறையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்றன. குழித்துறை நகராட்சிக்கு என புதியதாக 'பேருந்து நிலையம்' அமைப்பதற்கான இடம் ஆய்வில் உள்ளது. இது குறித்து தீர்வு செய்யப்பட்டவுடன் குழித்துறையிலிருந்து பேருந்து விடுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

(எ) சென்னை, பைராகி மடம், வெங்கடேச பெருமாள் கோயில் நிலத்தைத் தனியாருக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுத்துள்ளது குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "சென்னை, என். எஸ். சி. போஸ் சாலையில் உள்ள அருள்மிகு பைராகி மடம், வெங்கடேச பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான 167 என்றுள்ள ஒரு கிரவுண்ட் காலி